செய்தி வெளியீடு எண்: 420 நாள் : 20.08.2015

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (20.8.2015) சென்னை, அடையாறு, காந்தி நகர் 4–வது பிரதான சாலையை ''பா.இராமச்சந்திர ஆதித்தனார் சாலை'' என புதிதாக பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையைத் திறந்து வைத்தார்கள்.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக போற்றப்படும் பத்திரிகைத் துறையில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்புற பணியாற்றியவர் திரு பா.இராமச்சந்திர ஆதித்தன் அவர்கள் ஆவார். பாமர மக்களும் செய்திகளை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் செய்திகளை வெளியிட்டதன் மூலம் பத்திரிகை உலகில் தனக்கென தனி இடத்தை அவர் பெற்றிருந்தார். தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியை மீட்டெடுப்பதற்கும் இவர் முக்கிய பங்காற்றியுள்ளார். பத்திரிகை உலகில் தனி இடத்தைப் பெற்றிருந்த திரு பா.இராமச்சந்திர ஆதித்தன் அவர்களது நினைவைப் போற்றும் வகையில் சிறப்பு செய்ய வேண்டும் என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது விருப்பம் ஆகும்.

மாலை முரசு நாளிதழின் இயக்குநர் திரு இரா.கண்ணன் ஆதித்தன் அவர்கள், தனது தந்தை திரு பா.இராமச்சந்திர ஆதித்தன் வசித்து வந்த அடையாறு, காந்தி நகர், 4–வது பிரதான சாலைக்கு, அன்னாரது பெயரை சூட்டிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அதனை ஏற்று அடையாறு காந்தி நகர், 4-வது பிரதான சாலையை "பா.இராமச்சந்திர ஆதித்தனார் சாலை" என பெயர் மாற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சென்னை மாநகர மேயர் அவர்களுக்கு உத்தரவிட்டிருந்தார்கள். அதன் அடிப்படையில் 3.8.2015 அன்று நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து அடையாறு காந்தி நகர், 4-வது பிரதான சாலையை "பா.இராமச்சந்திர ஆதித்தனார் சாலை" என்று பெயர் மாற்றம் செய்வதற்கான அரசாணையும் 12.8.2015 அன்று வெளியிடப்பட்டது.

திரு பா.இராமச்சந்திர ஆதித்தன் நினைவைப் போற்றும் விதமாக, அடையாறு காந்தி நகர், 4-வது பிரதான சாலையை "பா.இராமச்சந்திர ஆதித்தனார் சாலை" என்று புதிதாக பெயர் சூட்டப்பட்ட சாலை பெயர் பலகையை நான் விரைவில் திறந்து வைப்பேன் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.8.2015 அன்று அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, அடையாறு காந்தி நகர், 4-வது பிரதான சாலையை "பா.இராமச்சந்திர ஆதித்தனார் சாலை" என புதிதாக பெயர் சூட்டப்பட்ட சாலை பெயர் பலகையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று நேரில் சென்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், "மாலை முரசு'' நாளிதழின் இயக்குநர் திரு. இரா.கண்ணன் ஆதித்தன், சென்னை மாநகராட்சி மேயர் திரு சைதை சா.துரைசாமி, தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு க.பணீந்திர ரெட்டி, இ.ஆப., சென்னை மாநகராட்சி ஆணையர்/முதன்மைச் செயலாளர் திரு விக்ரம் கபூர், இ.ஆ.ப., அரசு உயர் அலுவலர்கள் மற்றும் திரளான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : **20.8.2015**